அருகில உளள காசி விஸவநாதா கோவிலில கொடியேறறம நடைபெறற போது எடுதத படம.



## கரந்தை கலைக்கல்லூரியில்

# பன்னாட்டு கருத்தரங்கம் நிறைவுவிழா

தஞ்சாவூர், பிப்.21–

கரந்தை தமிழவேள் உமாமகேசுவரனார் கல்லூரியில் நாடகக் கருத்தரங்கம் மற்றும் நாடகவிழா கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழவேள் உமா மகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரியின் தமிழ் உயராய்வு மையத்தில் மூன்று நாள்கள் பன்னாட்டுக் கருத்தரங்கம், நாடக விழா மற்றும் நாடக நூல்கள் கண்காட்சி நடைபெற்றன. நேற்று நிறைவு விழா நடை பெற்றது. சிறப்பு விரு ந்தினராக நாடகவியலாளர் பிரளயன், பெங்களூரு உபேந்திரா, முனைவர் சிவாஜிகபிலன் ஆகியோர் கலந்து கொண்டனர். கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் செயலர் சுந்தரவதனம் முன்னிலையில் கல்லூரி முதல்வர் முனைவர் ராசாமணி தலைமையில் ஆய்வுக் கட்டுரை வழங்கிய கட்டுரையாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது

இந்நிகழ்வில் தஞ்சாவூர் தமி ழ்பல்கலைக்கழகம் நாடகத்துறை மாணவர்களின் மரகதவள்ளி என்னும் தெருக்கூத்து நிகழ்த்தப்பட்டது. தமிழ் பல்கலைக் கழகத்தின் நாடகத்துறை தலைவர் முனைவர் கற்பகம், தமிழ்ப்பல்கலைக்கழக அயலகத் தமிழியல் துறை இணை ப்பேராசிரியர் வெ ற்றிச்செல்வன், நாடகத்துறை உதவிப் பேராசிரியர் ஆழி. வெங்கடேசன் ஆகியோர் மரகதவள்ளி என்ற தெருக்கூத்து நிகழ்வை தொடங்கி வைத்து வாழ்த்துத்துரையாற்றினர். தமிழ் உயராய்வு மையத்தின் தலைவர் முனைவர் கண்மணி, உதவி பேராசிரியர் முனைவர் தெய்வக்கன்னி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இக்கரு த்தரங்கினை முனைவர்கள் மகேசுவரி, ஜெயராஜ், எழிலரசன்,கிருத்திகா, ஜெய்னம்பு பர்வின் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.